உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கோறறவன் றன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "


மலர். 2 | ஈஸ்வர ௵ புரட்டாசி ௴ 1௳ | இதழ் 6
Vol. 2 | செப்டம்பர்—1937 | No. 6


## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

(19) சங்கைதா ஞென்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்
சந்தோடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா னந்தமாயன்

மங்கைமார் கொங்கைசே ரங்கமோ கங்களால்
வம்பிலே துன்புறுமே
வண்குகா ஙினசோரு பம்ப்ரகா சங்கோடே
வந்துநீ அனபிலாள்வாய்

கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்சையூரா
கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா

செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் போன்றவே
சென்றுமோ தும்ப்ரதாபா
செங்கண்மால் பங்கஜா னன்தோழா னந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே.

## பதவுரை.

கங்கை சூடும் பிரான் - கங்காநதியைச் சடையிற்றரித்தருளிய சிவபெருமானுடைய, மைந்தனே - திருக்குமாரரே!, அந்தனே - அழகின் மிக்கவரே!, கந்தனே - கந்தப் பெருமானே!, விஞ்சை ஊரா - ஞான நூல்களையே உறைவிடமாகக்கொண்டவரே!, கம்பியாது - (சூராதியவுணர்களது கொடுமையால்) நடுங்காவண்ணம், இந்த்ரலோகங்கள் - தேவர்கோமானுலகமாகிய அமராவதி முதலிய தேவலோகங்களை, கா என்ற - காப்பாற்றவேண்டுமென்று முறையிட்ட, ஆகண்டல ஈசன் சொல் வீரா - அமரர் கோமானாகிய இந்திரன் புகழ்கின்ற வீரரே!, செம் கை வேல் - சிவந்த கரத்தில் வீற்றிருப்பதும், வென்றி வேல்கொண்டு - வெற்றியை யுடையதுமாகிய வேலாயுதத்தைக்கொண்டு, சூர பொன்ற - சூரபன்மன அழிய (ஏ-அசை), சென்று மோதும பராபரா - போர்த்தலத்திற் சென்று தாக்கி யமர்புரிந்த, பராபரா - கீர்த்தியின மிக்கவரே!, செங்கண் மால் - (தாமரை மலரையொத்த) சிவந்த கண்களையுடைய திருமாலும், பங்கஜானன் - தாமரையில் வீற்றிருக்கும பிரமதேவனும், தொழு ஆனந்த வேள் - (பக்தியுடன் பரவி) வணங்கும் ஆனந்த சொரூபியாகிய முருகவேளே!. செந்தில்வாழ - திருச்செந்திலில் வாழுகின்ற, தம்பிரானே - எம்பெருமானே!, சங்கைதான் ஒன்றுதான் இன்றியே - எண்ணல் அளவை ஒன்றுமின்றி அளவில்லாமலே, நெஞ்சிலே - மனத்திலே, சஞ்சல ஆரம்ப மாயன் - விலைமகளிரை யடையவேண்டுமென்ற கவலை ஆரம்பமாகி மாயையுடையவனும், சந்தொடு (ஏ-பிரிநிலை) குங்கும அலங்க்ருத ஆடம்பர சம்ப்ரம ஆனந்த மாயன் - சந்தனம குங்குமப்பூ முதலிய வாசனைப்பொருள்களையணிந்து (இரத்தினாபரணங்களாலும் ஆடைகளாலும) அலங்கரித்துக்கொண்டு இடம்பமாகவும் சம்ப்ரமமாகவும உலாவி இன்புறும் மாயையில் மூழ்கியவனுமாகிய அடியேன், மங்கைமார் கொங்கை சேர் அங்க மோகங்களால் - மகளிரது தனபாரங்களுடைய சரீரத்தின் மீதுள்ள ஆசைப்பெருக்கம் அதனிடத்துள்ள மயக்கமுதலியவைகளால், வம்பிலே துன்புறுமே - வீணாக துன்பத்தையடையாமல், வண் குகா - வள்ளற்றன்மையுடைய குகப்பெருமானே!, நின் ப்ரகாசங்கொடு - (ஏ-அசை) தேவரீரது அருட்பெருஞ் சோதி வீசும் திருக்கோலத்துடன், வந்து நீ அன்பில் ஆள்வாய் - தாங்கள் அடியேனிடம் வந்து அன்பினால் ஆட்கொண்டருளவேண்டும்.

## பொழிப்புரை.

உலகங்கள் அழிந்துபோகாவண்ணம் மிகப்பெருகிவந்த கங்கா நதியை தமது சடாடவியிற் சூடிக்கொண்ட கருணைக்கடலாங் கண்ணுதற்பெருமானது திருக்குமாரரே! அழகிற் சிறந்தவரே! கந்தப் பெருமானே! ஞான நூல்களை உறைவிடமாகக்கொண்டவரே! இந்திரலோகங்கள் (சூரபன்மனால்) நடுங்காவண்ணம் காத்தருளவேண்டுமென்று முறையிட்ட தேவர் கோமானால் புகழப்பட்டவரே! சிவந்த (தாமரையனைய) கரத்தில் வீற்றிருக்கும் வெற்றியையுடைய வேலாயுதத்தைக்கொண்டு போர்க்களஞ்சென்று சூரபன்மன் அழியுமாறு தாக்கிய கீர்த்தியின் மிக்கவரே! தாமரை மலரையொத்த கண்களையுடைய நாராயணமூர்த்தியும், தாமரையில் வசிக்கும் நான்முகனும் பக்தியுடன் வழிபட்டு வணங்கும் ஆனந்த சொரூபியாகிய அறுமுக வேளே! செந்திமா நகரத்தில எழுந்தருளியுள்ள தலைவரே! (விலைமகளிரது மோகத்தாலுண்டாகிய) அளவிலலாத பலவகைபாகிய சஞ்சலமானது மனத்திலே முளைக்க ஆரம்பித்த மாயைக்குட்பட்டவனும், சந்தனம் குங்குமப்பூ முதலிய வாசனைகளையணிந்து, (ஆடை ஆபரணங்களால்) அலங்கரித்துக்கொண்டு ஆடம்பரமாகவும சம்பிரமமாகவும் திரிகின்ற மாயையின் மிக்கவனுமாகிய அடியேன், மாதர்களது தனபாரங்களோடுகூடிய சரீரத்தின்மீதுள்ள ஆசைப்பெருக்கத்தால் வீணே துன்புற்று அழியாவண்ணம் வள்ளல்தன்மையுடைய குகமூர்த்தியே! தேவரீரது அருட்பிரகாசத்தோடுகூடிய திருவுருவத்துடன் வந்து அடியேனை அன்பினால் தடுத்தாட்கொண்டருள வேண்டும்.

## விரிவுரை.

கங்கை சூடும்பிரான் :—

### கங்கையைத் தரித்த வரலாறு.

முன்னொருஞான்று உமாதேவியார், திருக்கைலாசமலையிலுள்ள சோலையிலே ஒரு விளையாட்டாக ஒன்றும் பேசாதவராய்ச் சிவபெருமானுக்குப் பின்புறத்தில் வந்து, அவருடைய இருகண்களையும் தமது திருக்கரங்களாற் பொத்தினார். அதனால் எவ்வுயிர்களும் வருத்தமடையும்படி புவனங்கள் எங்கும் இருள் பரந்தது. சிவபெருமானுடைய திருக்கண்களினாலேயே எல்லாச் சோதியுந்தழைத்த தன்மை

யினால், சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய இவர்களின் சுடர்களும் மற்றைத்தேவர்களின் ஒளிகளும் பிற ஒளிகளும் அழிந்து எல்லாம் இருள்மயமாயின. அம்மையார் அரனாரது திருக்கண்களைப் பொத்திய அக்கணமொன்றில், உயிர்கட்கெல்லாம் எல்லையில்லாத ஊழி காலங்களாயின. அதனை நீலகண்டப்பெருமான நோக்கி, ஆன்மாக்களுக்குத் திருவருள்செய்யத் திருவுளங்கொண்டு, தம்முடைய நெற்றியிலே ஒரு திருக்கண்ணையுண்டாக்கி, அதனால் அருளொடு நோக்கி, எங்கும வியாபித்த பேரிருளை மாற்றி, சூரியன் முதலாயினோர்க்கும் சிறந்த பேரொளியை யீந்தார். புவனங்களிலுள்ள பேரிருள முழுதும் நீங்கினமையால ஆன்மகோடிகள் உவகை மேற்கொண்டு சிறப்புற்றன. சிவபெருமானுடைய செய்கையை உமாதேவியார் நோக்கி அச்சமெய்தி அவருடைய திருக்கண்மலர்களை மூடிய இருகர மலர்களையும தண்ணென்று எடுத்தார். எடுக்கும்பொழுது தமது பத்துத திருவிரல்களிலும் அச்சத்தினாலே வியர்வை தோன்ற, அதனை உமாதேவியார் நோக்கி திருக்கரங்களையுதறினார். அவ்வியர்வை பத்துக் கங்கைகளாய் ஆயிரநூறுகோடி முகங்களைப் பொருந்திச் சமுத்திரங்கள்போல எங்கும் பரந்தன. அவற்றை அரியபிரமாதி தேவர்களும் பிறருங்கண்டு, திருக்கைலையில் எழுந்தருளிய தேவதேவன்பால் சென்று, வணங்கித்துதித்து, "எம்பெருமானே! இஃதோர் நீரப்பெருக்கு எங்கும் கல்லென்று ஒலித்து யாவரும் அழியும்படி அண்டங்கள முழுவதையும் கவர்ந்தது; முன்னாளில் விடத்தையுண்டு அடியேங்களைக் காத்தருளியதுபோல் இதனையுந் தாங்கி எங்களைக் காத்தருளுவீர்" என்று வேண்டினார்கள். மறைகளுங்காணாக் கறைமிடற்றண்ணல் அந்நதியின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லி, அதனை அங்கே அழைத்து, தமது திருச்சடையிலுள்ள ஓர் உரோமத்தின்மீது விடுத்தார்.

அதனைக்கண்டு மகிழ்ந்து நான்முகனும் நாரணனும் இந்திரனும் "எம்மையாட்கொண்ட எந்தையே! இவ்வண்டங்களை யெல்லாம் விழுங்கிய கங்கை உமது அருட்சத்தியாகிய அம்பிகையாரது திருக்கரத்திற்றோன்றினமையாலும், உமது திருச்சடையிற் சேர்த்தமையாலும் நிருமலமுடையதாகும். அதில் எமது நகரந்தோறும் இருக்கும்படி சிறிது தந்தருளல்வேண்டும்" என்று வேண்டினார்கள், சிவபெருமான் திருச்சடையிற் புகுந்திருந்த கங்கையிற் சிறிதை அள்ளி அம்மூவர்களுடைய கைகளிலுங் கொடுத்தார். அவர்கள் வாங்கி

மெய்யன்போடு வணங்கி, விடைபெற்றுக்கொண்டு தத்தம் நகர்களை யடைந்து அங்கே அவற்றை விடுத்தார்கள். அந்த மூன்று நதிகளுள் பிரமலோகத்தையடைந்த கங்கை பகீரதமன்னனுடைய தவத்தினாற் பூமியின் மீண்டுவர, சிவபெருமான் பின்னும் அதனை திருமுடிமேற் றங்கி, பின் இந்த நிலவுலகிற் செல்லும்படி விடுத்தார். அந்நதி சகரர்கள் அனைவரும் மேற்கதிபெற்றுய்யும்படி அவர்கள் எலும்பிற் பாய்ந்து சமுத்திரத்திற் பெருகியது. இதனையொழிந்த மற்றை இருநதிகளும் தாம் புகுந்த இடங்களில் இருந்தன நமது அருட் சத்தியாகிய உமையம்மையாருடைய திருக்கரத்திற்றோன்றிய கங்கா நதி உலகங்களையழிக்காவண்ணம் திருவருண்மேவிட்டால் சிவபெருமான் அதனை திருமுடியிற்றரித்த வரலாறு இதுவேயாம்.

> மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மறறொருத்தி
> சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ?
> சலமுகத்தால் அவன்சடையிற் பாயந்திலனேல் தரணியெல்லாம்
> பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.
>
> —திருவாசகம்.

பங்கஜானன் = பங்கஜாசனன், சகரங்குறைந்து இடைக்குறையாயிற்று.

ஆனந்தவேள் :—

முருகப்பெருமான் ஆனந்தமூர்த்தியாம். இதனை "ஆனந்தம் ப்ரஹ்ம" எனும் யஜுர்வேத தைத்திரீயோபநிடத ஆனந்தவல்லி வசனத்தாலும், "கந்தசுவாமி சிவபெருமானது தோளின்மீது ஏறியிருந்தனர்; அஞ்ஞான்று சிவபெருமான் அளவற்ற ஆனந்தசொரூபியாயினும் தம்முடைய உத்தமபுத்திரராம் ஆனந்தசாகரத்தினது திருமேனி பரிசித்தலாய அளப்பறு மகிழ்ச்சியில் அமிழ்வாராயினர்" எனும் பொருளைத்தரும் முதல்வன்புராண சம்பவகாண்டத்து 34-ம் அத்தியாயத்து 4, 5ஞ் சுலோகங்களானுமறிக.

> "ஆனந்த வத்துவின் கழல் வாழ்த்தி வணங்குவாம்"

என்ற ஸ்ரீமத் குமாரகுருதாசசுவாமிகள் திருவாக்கையும் உய்த்துணர்க. இதனாலன்றோ முருகப்பெருமானது திருவருளை பெறுதார்க்கு ஆனந்தமில்லையென்பது ஆன்றோர் கொள்கை.

## கருத்துரை.

*கங்கையிலேச்சிய கண்ணுதற்கடவுளது திருக்குமாரரே! கந்த மூர்த்தியே! கலை விநோதரே! இந்திரனால் துதிக்கப்பெற்றவரே! வெற்றிவேலைக்கொண்டு சூரனையழித்த பெருங் கீர்த்தியையுடையவரே! அரியயனால் தொழப்பட்ட ஆனந்தமூர்த்தியே! செந்திலாதிப! சஞ்சலமனமுடையவனாகி வாசனைப்பொருள்களையணிந்து ஆடம்பரமாகத்திரிகின்ற மாயையுடையவனாகிய அடியேன், விலைமகளிர் வலைப்பட்டு அழியாவண்ணம் தேவரீர் தமது திருவருட்பிரகாசத்திருமேனியுடன்வந்து காத்தருள்வீர்.*

(20) அங்கை மேனகுழ லாய்வார் போலே
சாந்தி நீனறய லோடே போவா
ரன்பு கொண்டிட நீரோ போறீ ரறியீரோ
அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோநா மீதே
அன்று மின்றுமோர் போதோ போகா துயில்வாரா
எங்க ளந்தரம் வேறு ரோராவார்
பண்டு தந்தது போதா தோமே
லின்று தந்துற வோதா னீதே னிதுபோதா
திந்த நின்றதேன் வீடே வாரீ
ரென்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா தருள்வாயே
மங்கு லின்புறு வானாய் வானூ
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றும்புகை நீரு வீறு எரிதீயாய்
வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானாய் மலரோனாய்
உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பந்திகள் தாமாய் வானாய்
ஒன்றி லுங்கடை தோயா மாயோன் மருகோனே
ஒண்த டம்பொழில் நீடூர் கோடூர்
செந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே.

## பதவுரை.

மங்குல் இன்புறு வானாய் - மேகமானது இன்புற்று சஞ்சரிக்கும் ஆகாய பூதமாகியும், வானூடு அன்று அரும்பிய காலாய் - அவ்வாகாயத்தில் அந்நாளில் தோன்றிய வாயுபூதமாகியும், நீள்கால் மண்டுறும் புகை நீறு வீறு எரிதீயாய் - பெருங்காற்றுடன் நெருங்கி புகையுடனெழுந்து யாவற்றையும் நீறாக்கும் வன்மையுடைய அக்கினிபூதமாகியும், வந்து இரைந்து எழும் நீராய் - ஒலித்து எழுந்துவரும் அப்புபூதமாகியும், நீர் சூழ் அம்பரம் புனை பாராய் - தண்ணீரைத் தனக்கு ஆடையாகப்புனைந்துள்ள பிருதிவி பூதமாகியும், பார் ஏழ் மண்டலம் புகழ் நீயாய் - நிலம் முதலிய எழுலகங்களும் புகழும் குகக்கடவுளாகிய தாங்களாகவும், நானாய் - அடியேனாகவும், மலரோனாய் - பிரமதேவராகியும், உங்கள் சங்கரர் தாமாய் - உமது பிதாவாகிய சிவபெருமானாகவும், நாம் ஆர் அண்ட பந்திகள் தாம் ஆய்வானாய் - எத்துணையவோ என்று அச்சத்தை விளைவிக்கக்கூடிய எண்ணிலாத அண்டகோடிகளை ஆராய்பவராகியும், ஒன்றிலும் கடை தோயா - முடிவில் ஒன்றிலும் கலப்பில்லாதவராகியுமாகிய, மாயோன் - மாயவன் என்னும் திருமாலினது, மருகோனே - மருகரே! ஒண் தடம் பொழில் நீடு ஊர் - ஒளி பெற்றதும விசாலமுடையதுமாகிய மலர்ச்சோலைகள் சூழ்ந்த புராதன தலமாகிய, கோடு ஊர்—சங்குகள் தவழும், செந்திலம்பதி வாழ்வே - திருச்செந்தூர் என்னும க்ஷேத்திரத்தின் வாழ்வையுடையவரே! வாழ்வோர் உண்ட நெஞ்சு அறிதேனே - அத்தலத்தில் வாழ்பவர்கள பருகிய உளளத்தில் தித்தித்தறிந்துகொள்ளும் ஆனந்ததேனே! வானோர் பெருமாளே! தேவர்களுக்கெல்லாம் பெருமானாக வீற்றிருப்பவரே!, அம் கை மென் குழல் ஆய்வார் போலே - அழகிய கரத்தால் மென்மையாகிய அளகபாரக் கூந்தலை சிக்கெடுப்பவர்களைப்போல், சந்தி நின்று - பல தெருக்கூடுமிடத்தில் நின்று, அயலோடே போவார் - அயலிடத்திற்கெனச் செல்லுவோர்கள், அன்புகொண்டிட - தங்கள்மீது அன்புகொள்ளும்படி, நீரோ போறீர் - நீங்களா போகின்றீர்கள்?, அறியீரோ - நான் நிற்பதை அறியவில்லை போலும்?, அன்று வந்து ஒருநாள் போனீர்-அன்றைத் தினம் ஒருநாள் இவ்விடம் வந்து போனீர், நாம் பின்புகண்டு அறியோம் - நாம் பின்னர் ஒருவரையொருவர் பார்த்து அறியவேயில்லை, ஏதே - உம்முடைய அன்பு இதுவோ? அன்றும் இன்றும் ஓர்போதா போகா - தாங்கள் என்னிடம் வந்துபோன அன்றுதொடங்கி இன்று

வரை ஒரு பொழுதே போகிறதில்லை, துயில் வாரா - இரவில் தூக்கமே வருவதில்லை, எங்கள் அந்தரம வேறு ஆர் ஓர்வார் - எமது இரகசியத்தை தங்களைத்தவிர வேறு யார்தான் ஆராயவல்லவர்? பண்டு தந்ததுபோதாதோ- முன்பு கொடுத்தீரே அதுவே போதாதோ? மேல் இன்று தந்து உறவோதான் - இனிமேல் இன்றைக்கு வேறு பொருள் கொடுத்துத்தான உறவாடவேண்டுமென்பதில்லை, ஈதேன் இது போதாது - இது என்ன தாங்கள் இப்படி வந்து தெரிசனம் கொடுத்தீரே இது போதாதோ? இங்கு நின்றது என் - நடுவீதியாகிய இங்குநின்றிருப்பது எதற்கு? வீடே வாரீர் - வீட்டிற்கு வாருங்கள், என்று இணங்கிகள் மாயா லீலா - என்று இவ்வாறு இணக்கமாகப்பேசி (பொருள்பறிக்கும்) மாயா லீலையுடைய, இன்ப சிங்கியில் - விலைமகளிரது இன்பமாகிய குளிர்ந்து கொல்லும் விஷக்குழியில், வினை விழாது - வினை விழுந்து உழலாவண்ணம், அருள்வாயே - அருளபுரிந்து காப்பாற்றவேண்டும.

## பொழிப்புரை.

மேகங்கள் இன்புறஉலவும் ஆகாய பூதமாகியும், அவ்வாகாயத்தில் அந்நாளில் தோன்றிய வாயுபூதமாகியும், பெருங்காற்றுடன் நெருங்கியெழும் புகையுடன்கூடி யாவற்றையும் நீறாக்கும் வலியுடைய அக்கினிபூதமாகியும, ஒலித்தெழுந்துவரும் அப்பு பூதமாகியும், நீரை ஆடையாகவுடைய பிருதிவி பூதமாகியும், நிலம் முதலாக (சத்திய உலகம ஈறாகவுள்ள) ஏழுலகங்களும் புகழும் தேவரீராகியும், அடியேனாகியும், பிரமதேவராகியும, உமது பிதாவாகிய சிவமூர்த்தியாகியும், எத்துணையவோ? என அச்சத்தை விளைவிக்கும் அண்ட பந்திகளை ஆராய்பவராகியும், முடிவில் ஒன்றிலும தோயாத மாயவனாகிய திருமாலினது மருகரே! ஒளிபெற்றதும் விசாலமுடையதுமாகிய சோலைகளால் சூழப்பெற்ற புராதனதலமும, சங்குகள தவழப்பெற்றதுமாகிய திருச்செந்திலம்பதியில் வாழ்கின்றவரே! அத்தலத்தில் வாழ்வோர்கள் பருகிய நெஞ்சததில் தித்திக்கும் ஆனந்தத்தேனே! தேவர் பெருமாளே! அழகிய காத்திரால் மெல்லிய கூந்தலை ஆராய்பவரைப போல் பல தெருக்கூடுமிடத்தில் நின்று அயலில் செல்லும் ஆடவர் தமமீது அன்பு கொள்ளுமாறு நீங்களாபோகிறீர்? என்னைப்பார்க்கவில்லைபோலும்? அன்று ஒரு நாள்வந்துபோயினீர். பின்பு உம்மைக் காணவேயில்லை, உமது அன்பு இதுவோ? நீர் வந்துபோன அன்று

முதல் இன்றுவரை பொழுதே போகிறதில்லை. இரவில் தூக்கமும் வருவதில்லை. உம்மைத் தவிர எமது உள்ளக்கிடக்கையை ஆராயவல்லவர் யாவர்? முன்பு கொடுத்ததுபோதாதோ? இனிமேல் இன்று புதிதாகக் கொடுத்து உறவாடவேண்டுமோ? வேண்டியதில்லை. என்ன இது; நீர் இவருவது தெரிசனந்தந்தீரே இது போதாதோ? இங்கு நிற்பது எதற்கு? வீட்டிற்கு வாருங்கள் என்று இணக்கமாகப் பேசி (அழைத்துக்கொண்டுபோய்) மாயலீலைகளைப்புரியும் இன்பம்போல் குளிர்ந்து கொல்லும் விலைமாதராது நச்சுக்குழியில் அவமே வீழ்ந்தழியாவண்ணம் அருள்புரிவீர்.

## விரிவுரை.

" அங்கை மென்குழ . . . . . . என்றிணங்கிகள் "

நடுவீதியில் நின்று அவ்வீதிவழியே செல்லும் இளைஞர்களை வலிந்தழைத்து பல இனியவார்த்தைகளைக்கூறி, கண்வலை வீசி, தமது நடையுடைகளால் மயக்கி, மனமுடனே பொருளையும் ஆவியையும் பறிமுதல்புரியும விலைமகளிரது சாகசங்களை எடுத்துக்கூறி; அதனிடத்து மயங்காவணணம் விழிப்பை யுண்டுபணணுகிறார். சிவஞானந் தலைப்படுமாறு பததிநெறி சென்று முததிநிலையடைய விழைவார்க்கு முதறபடி மாதராசையை நீக்குவதேயாம். முதலில் விலைமகளிரை வெறுத்து இல்லறத்திருந்து பின்னர் அதனையும் வெறுத்து நிராசையை மேற்கொள்ளவேண்டும்.

எங்கேனு மொருவர்வர அங்கேக ணினிதுகோடு
இங்கேவ ருனதுமயல் தரியாரேன்
றிந்தாவே னினியஇதழ் தந்தேனை யுறமருவ
என்றுரைசை குழையவிழி யிணையாடி
தங்காம லவருடைய வுண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவெபறி கொளுமாணர்
சங்கீத கலவிநல மென்றேது முததிவிட
தண்பாரு முனதருளை யருள்வாயே
—திருப்புகழ்

சந்தி = என்பதற்கு மாலைநேரம் என்றும் பொருள்கொள்ளலாம்.

சிங்கி = குளிர்ந்து கொல்லும் நஞ்சு.

மங்குலின்புறு. . . . . மாயோன்:—

விஷ்ணு என்றால் வியாபகன் என்று பொருளாதலின் பஞ்சபூதங்களாகியும் விளங்குகின்றனர். சங்கார் தாமாய், முருகனாய்,

என்பதன் பொருள் : நாராயணர் சிவனடியாராதலால் சிவ சாரூப்ய மும் விஷ்ணுவுக்கு உளதாதலால சிவமூர்த்தியாகவும் விளங்குகிறார் என்றனர். நாராயணர திருநீறு தரித்து உருத்திராக்கமணிந்து சிவ வழிபாடு செய்கின்ற சிவனடியாரில் முதன்மையானவர். அங்ஙனஞ் சிவபெருமானை வழிபட்ட ஆலயங்கள் இற்றைக்கும் ஆங்காங்கு விளங்குகின்றன.

உண்டநெஞ்சறிதேனே :—

பத்திநெறி சென்று தினந்தோறும் இறைவனை மன மொழி மெய் என்ற மூன்று கரணங்களாலும வழிபட்டு, இறைவனது திரு வருட் பெருமையை நினைந்து நினைந்து நெஞ்சம நெகிழ்ந்து, கண்ணீர் மல்கி, உரைதடுமாறி உரோமஞ் சிலிர்ப்ப ஒழியா ஆர்வத்துடன் அன்பு செய்வார்க்கே அப்பெருமானுடைய தியானநதம் இனிக் கும் அவ்வாறு வழிபடத்தெரியாத அபாக்யவான்களுக்கு அமமது ரம் இனிப்பது யாங்ஙனம்? அன்பு நெறி நின்று ஆணடவனை வழி படுவார்க்கு அவ்வானந்தத்தேன் நினைக்குந்தோறும் பேசுந்தோறும காணுந்தோறும் மற்று எக்காலத்தும இன்பத்தை வழங்கும். இதனை மணிவாசகனர் தமிழ்மறை தெரிக்குமாறு காண்க.

தினைத்தனை உள்ளதோா பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தோறுங் காண்தோறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தேலும் புள்நெக ஆனந்த தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

இறைவனைத் தேனே என்று பரிந்தழைக்கும் ஆன்றோா அமுத வாக்குகளையும் உற்று நோக்குக

"திருவே என் செல்வமே தேனே வானோர் செழும்
பொருளே"

—அப்பா.

"சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவதேவனைத் தித்திக்குந் தேனை"

—சுந்தரர்.

## கருத்துரை.

பஞ்சபூத சொரூபியாயும் யாவையுமாயும் விளங்கும் திருமாலி னது மருகரே! செநதிலாதிப! உண்ட நெஞ்சறி தேனே! தேவர் பெருமானே! விலைமகளிரது மாயாலீலையிற சிக்கி வீணே அழியாமல் நின் திருவருளால் அடியேனைக் காத்தருளல் வேண்டும்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

विशालेषु कर्णान्त दीर्घेष्वजस्रम्
दयास्यन्दिषु द्वादशस्वीक्षणेषु ।
महीषत्कटाक्षः सकृत्पातितश्चे
द्भवेत्ते दयाशीलका नाम हानिः ॥

(15) விசாலேஷு கார்ணாந்த தீர்கேஷ்வஜஸ்ரம்
தயாஸ்யந்திஷுத்வாத சஸ்வீக்ஷணேஷு
மயீஷத் கடாக்ஷ: ஸக்ருத் பாதிதஸ்சேத்
பவேத்தே தயாசீல காநாமஹானி ||

## பதவுரை.

ஹே தயாசீல! - கருணை நிறைந்தவரே!
விசாலேஷு கர்ணாந்த தீர்கேஷு - விசாலமாக காதுவரையில் நீண்டிருப்பவைகளும்,
தயாஸ்யந்திஷு - கருணைப்பெருக்குடையவைகளும் ஆன,
த்வாதசஸு ஈக்ஷணேஷு - பன்னிரண்டு திருக்கண்களில் விளங்குகின்ற,
கடாக்ஷ: - கடைக்கண் பார்வையானது,
ஸக்ருத் - ஒருதடவையேனும்,
ஈஷத் - சிறிது,
மயி - என்மீது,
பாதித: சேத் - செலுத்தப்பட்டதேயானால்,
தே - தேவரீருக்கு,
காநாமஹாநி பவேத் - என்ன கெடுதல்தான் உண்டாகப்போகின்றது.

## பொழிப்புரை.

ஓ தயாஸ்வபாவமுடையவரே! மிக விசாலங்களும் அன்பர்களை காக்கவேண்டுமென்னும் கருணைப் பிரவாகத்தை யுடையவைகளும் ஆகிய தேவரீரது பன்னிரண்டு திருக்கண்களிலுள்ள கடாக்ஷங்களில் சிறிது ஒரு தடவையேனும் என்மீது செலுத்தினல் தேவரீருக்கு என்ன குறைதான் நேரிடப்போகின்றது.

सुताङ्गान्भवोमेऽसि जीवेति षड्वा
जपन्मन्त्र मीशो मुदाजि घ्रतेयान् ।
जगद्भारभृद्भ्यो जगन्नाथ तेभ्यः
किरीटोज्ज्वलेभ्यो नमोमस्त केभ्यः ॥

(16) ஸுதாங்காத்[3] ப[4]வோமே஽ஸி ஜீவேதிஷட்[3]தா[4]
ஜபன்மந்த்ர மீசோ முதாஜிக்ரதேயான் ।
ஜகத்[3]பா[4]ர ப்[3]ருத்ப்யோ[3] ஜகந்நாத[3] தேப்[4]ய:
கிரீடோஜ்வலேப்யோ நமோமஸ்த்து கேப்ய: ॥

## பதவுரை.

ஹே ஸுத - ஓ குழந்தாய,
மே - எனது,
அங்காத் - அங்கத்தினின்றும்,
பவ. அஸி - தோன்றியவனாகவிருக்கின்றாய்,
ஜீவ - ஆயுஷ்மானாக இரு
இதி மந்த்ரம் - என்கிற மந்திரத்தை,
ஈச: - பரமசிவன்
ஷட்தா - ஆறுதடவை,
ஜபன் - ஜபிக்கின்றவராய்,
முதா - மகிழ்ச்சியோடு,
யான் ஜிக்ரதே - எவைகளை முகர்கின்றாரோ,
ஹே ஜகன்நாத! - உலகத்திற்கு தலைவனே,
கிரீடோஜ்வலேப்ய: - கிரீடங்களினால் பிரகாசிக்கின்றவைகளும,
ஜகத்பாரப் ப்ருத்ப்ய. - உலகத்தின் சுமையைத் தாங்குகின்றவைகளுமான,
தேப்ய: மஸ்த்தகேப்ய: நம: - தேவரீருடைய அத்தகைய சிரசுகளுக்கு நமஸ்காரம்.

## பொழிப்புரை.

ஓ குழந்தாய் நெடுங்காலம் ஜீவித்திருவென்கிற மந்திரத்தைச் சொல்லி பரமசிவக்கடவுள் எந்த சிரசுகளை மூகர்கின்றாரோ கிரீடங்களை அணிந்திருப்பவைகளும் உலகத்தின் சுமையைத் தாங்குகின்றவைகளும் ஆன தேவரீருடைய அத்தகைய சிரசுகளை நமஸ்கரிக்கின்றேன். இதனால் முருகக்கடவுளின் ஆறு சிரசுகளைத் தியானிப்பவர்கள் உலகத்தில் மிகச் சவுக்கியத்துடன் நெடுங்காலம் வாழ்ந்திருப்பார்கள் என்பது குசிப்பிக்கப்பட்டது.

स्फुरद्रत्नकेयूरहाराभिराम-
श्चलत्कुण्डल श्रीलसद्गण्ड भागः ।
कटौ पीतवासाःकरे चारु शक्तिः
पुरस्तान्ममास्तां पुरारेस्तनूजः ॥

(17) ஸ்புரத்ரத்ந கேயூர ஹாராபிராம

ஸ்சலத்குண்டலஸ்ரீ லஸத்கண்ட பாக:।

கடௌபீதவாஸா: கரேசாரு சக்தி:

புரஸ்தான்மமாஸ்தாம் புராரேஸ்தனூஜ:॥

### பதவுரை

| | |
|---|---|
| ஸ்புரத ரதநகேயூர ஹாராபிராம: | - அழகிய ரத்தினங்களைப் பதித்த தோள்வளை, முத்துமாலை, இவைகளால் மனதைக கவருகின்றவரும, |
| சலதகுண்டல ஸ்ரீலஸத்கண்டபாக: | - அசைகின்ற ஒளியால் பிரகாசியாநின்ற கன்னங்களையுடையவரும, |
| கடௌபீதவாஸா: | - இடுப்பில் பீதாம்பரத்தையும, |
| கரேசாரு சக்தி. | - கையில அழகிய வேற்படையையும் உடையவரும், |
| புராரே: தனூஜ. | - பரமசிவககடவுளுககு புததிரனும் ஆன முருகப்பெருமான, |
| மம புரஸ்தாத் ஆஸ்தாம | - எனககெதிரில் ப்ரதயக்ஷமாகட்டும். |

## பொழிப்புரை.

மிகப்பிரகாசியாநின்ற ரத்தினங்களைப்பதித்த தோள்வளை முத்துமாலை குண்டலங்கள் இவைகளுடனும் இடையில் பீதாம்பரமும் கையில் வேலாயுதமும் தாங்கிக்கொண்டு கண்களைக்கவரும் வனப்போடு பரமசிவபுத்திரனாகிய முருகப்பிரான் என்முன்னால் எழுந்தருளட்டும்.

(தொடரும்)

ஓம் குஹாயநம:

# கந்தர் திருவிளையாடல்

## பார்வதியம்மையார் திருமணம்.

(149-ம் பக்கத் தொடர்ச்சி)

உமாதேவியாரது தவத்தைக்கண்டு திருவருள்வழங்கி வெள்ளி மங்கிரி சென்று வீற்றிருந்தருளிய விரிசடைக்கடவுள், எழு முனிவர்களை வருமாறு திருவுளத்தே நினைந்தருளினார். நிலகண்டரது நினைவை யுணர்ந்த இருடிகள் எழுவரும் அஞ்சி, உடல் நடுங்கி, விரைந்துவந்து சிவமூர்த்தியை வணங்கி "தேவதேவ! பங்கயன் மால் முதலிய பண்ணவர்கள் உனது ஏவலுக்கு உரியவர்களாயிருப்ப, அடியேங்களை நினைந்தருளினீர்; அதனால் அவர்கள் செய்த தவத்தினும் யாங்கள் செய்ததவம் அதிகம் போலும். எம்மை யீன்றருளிய எந்தையே! எங்களை வருமாறு கருணையுடன் நினைந்தருளினமையால் நாங்கள் உய்ந்தனம்; எமது தீவினை தீர்ந்தது; இனியொரு தீமையுண்டாகுமோ? ஆன்மாக்களுய்யும் வண்ணம் ஐந்தொழில்களை அநாதியே தொடங்கி இடையறாதியற்றும் ஆதிநாயக! எமது சிறுமை நீங்குதற்பொருட்டு சிந்தித்ததனை, அடியேங்கள் விரைந்து செய்யும்பணியைப் பணித்தருள்வீர்" என்று விண்ணப்பம் புரிந்தார்கள். சிவபெருமான் "அன்புடையீர்! நீவிர் இமயமலையரசனிடம்போகி உமாதேவியை இன்று நமக்கு திருமணம் செய்துத்தருமாறு பேசி, விரைந்து வருவீர்கள்" என்று பணித்தருளினார்.

சத்த முனிவர்கள் இறைவனது ஏவலைச் சிரமேற்றாங்கி வணங்கி, இமயவெற்படைய, இமவான் தன் மனைவியுடன் எதிர்கொண்டு வந்தித்து, இருக்கையீந்து, அருச்சனைமுதலிய வழிபாடுசெய்து, துதித்து நின்று "தபோதனர்களே! உமது திருவடிகள் ஈண்டு படுதலால் இவ்விமயமலை, மேருமலையினும் புனிதமுடையதாகித் தலைமை பெற்றது; நாயினேனது பிறவித்துன்பமும் இப்பொழுதே நீங்கியது; நீங்கள் அடியேன்பால் வந்த காரணம் யாது? என்றான். இருடிகள் அகிலாண்டங்களையுமீன்ற நின் புதல்வியை உயிர்க்குயிராய்நின்ற சிவமூர்த்தி திருமணம் புரிந்துகொள்ளுதற்பொருட்டு நின்பால் எம்மை ஏவினார்" என்றார்கள். வரையரசன் "மூவர்க்கு முதல்வராகிய

முக்கட்பரமர்க்கு அகிலாண்டகோடியீன்று கன்னியெனமறைபேசும்
மரகதவல்லியை மணஞ்செய்துக்கத்து என்னையும் அடிமையாகத் தரு
வேன்" என்றனன். உடனே அருகில்நின்ற அவன் மனைவியாகிய
மேனை "நான்முகன் புதல்வனாகிய தக்கன் தனது புதல்வியைக்
கலியாணஞ் செய்துகொடுக்க, சிவபெருமான் அவனுடைய தலையை
யறுத்தார் என்று கூறுகின்றார்கள். அதனை நினைந்து நினைந்து நெஞ்
சம் அஞ்சுகிறது; ஆகலால் எங்கள் குலமகளைக் குன்றவில்லிக்குத்தரு
வது எவ்வாறு?" என்றனள். முனிவர்கள் மேனையை நோக்கி
"அம்மா! நீ வருந்தாதே; தேவதேவராகிய சிவபெருமானது செய்
கையை நீ நன்றாக அறிந்தாயில்லை. தக்கன் வேள்வியிலே தமக்குத்
தரக்கூடிய அவியைமறுத்து சிவநிந்தை செய்ததால் அவன் தலையைத்
தடிந்தனர். தம்மை வழிபாடுசெய்வோர்க்கு அறக்கருணையும், அல்
லாதார்க்கு மறக்கருணையும் செய்பவர். இவ்வுண்மையை அறிஞர்கள்
அனைவருமறிவார்கள்; நீயும் அறியக்கடவாய்; வெறுப்பொன்றும் எண்
ணற்க" என்றனர். மலையரையன் "இது சரதம்" என்ன, மேனை
அஞ்சி, நடுநடுங்கி, 'எம்பெருமானுடைய திருவருட்செயல்களை அறி
யாது சொல்லிவிட்டேன்" என்று நினைந்து வருந்தி, இருடிகளது
திருவடிகளை வணங்கிநின்று, "பெண்ணறிவென்பது பெரும் பேதை
மையை உடையதன்றோ? சிவனது திருவருட்குணங்களை ஒரு
சிறிதுமுணரேன்; அறிவின்மையால் யான்கூறிய புன்மொழிகளைப்
பொறுத்தருள்வீர்" என்றனள். அருந்தவர்கள் அருளபுரிந்தார்கள்.
வரையரசன் "தவநெறிப்பெரியீர்! இவள் புன்மொழியைத்திருவுளங்
கொள்ளாதொழிமின்; உமாதேவியை விரைவில் திருமணம்புரிந்து
கொள்ள வரும்வண்ணம் சிவமூர்த்திக்குத் தெரிவியுங்கள்" என்றான்.
அதுகேட்ட இருடிகள் மனமிக மகிழ்ந்து ஆசிகூறிவிட்டு, திருக்கயி
லாயமடைந்து, சிவபெருமான் சந்நிதிசென்று, திருமணத்திற்கு மலை
யரையன் உடன்பட்டமையை விண்ணப்பஞ்செய்தார்கள். கண்ணு
தற்கடவுள் "முனிவர்களே! உங்கள் செயலைச் செய்யச்செல்லு
மின்" என்று விடைதர, இருடிகள் எண்டோளனை இறைஞ்சித்
தங்கள் இருக்கையடைந்தார்கள்.

வரையரையன் சிவபெருமானது திருவருளையுன்னி உளமகிழ்ந்து
தேவதச்சனை விளித்து "பார்வதி பரமேஸ்வர மணவினை நிகழ்த்த
இந்நகரை இந்திரலோகம்போல் எழில்பெற அலங்கரிப்பாய்!'
என்ன, தேவதச்சன் வாழைக் கமுகுகளை நாட்டி, தோரணங்களை

நீட்டி, நவரத்தினங்களால் மண்டபம், தடாகம், சிகரம் முதலியன உண்டாக்கி, நறுமணங்கமழ மலர்தூவி, பூஞ்சோலைகள்சூழ ஓர் மண்டபத்தைப்புதுக்கி கண்டவர்கள் கண்கவரும் கவினுடையதாக அலங்கரித்தனன். மலையரையன் அது கண்டு மகிழ்ந்து மாலயனாதி வானவர்களைத் தங்கள் தங்கள் மனைவியர்களுடன் திருமணங்காண வருமாறு தூதர்களை எங்கும் விடுத்தான். தேவர் கூட்டங்களும் முனிவர் கணங்களும் இமயமலையில் கூடி எள்ளிட இடமின்றி இருந்தன. இலக்குமி, வாணி, இந்திராணி, இருடி பத்தினிகள், தேவமாதர்கள் முதலிய பெண்மணிகள் கடல்போல் ஆங்கு குழுமியிருந்தார்கள். மகாமேரு மந்தரம் முதலிய உறவினரும், சத்த நதிகளும், நாக இனங்களும திக்குயானைகளும் பிறவும் வந்தன. கண்பெற்றதன் பயன் இன்றே கிடைத்தது என்று ஒவ்வொருவரும் மட்டற்ற மகிழ்ச்சி மிக்குற்றிருந்தனர்.

மலையரையன், தனது தமருடன் கயிலைமலைசென்று, நந்திதேவரனுமதி பெற்று உள்ளே சென்று, முக்கண்மூர்த்தியைத் தொழுது "எந்தையே! அகிலாண்ட நாயகியைத் திருமணங்கொள்ளத் திருவுளங்கொண்டருளினீர்; கணிதவல்லுனர்கள் மங்கல தினமெனக் கூறிய பங்குனி உத்தரம் இன்றேயாகும்; எமது பரமபதியே! இப்பொழுது இமையமலைக்கு எழுந்தருளுவீர்" என்று விண்ணப்பம் புரிந்தான் சிவபெருமான் "நாம் இப்பொழுதே வரம்பில்லாத கணங்கள் சூழ இமையவரைக்கு எழுந்தருளுவோம்; நீ முன்னே செல்லுதி" என்ன வரையரசன வரைவில்லியை வணங்கி தனது நகரையடைந்தான்.

கண்ணுதற்கடவுள் நந்திதேவரை நோக்கி "நம்முடைய திருமணக்கோலத்தைத் தெரிசிக்கும்பொருட்டு, உருத்திரகணங்களையும், அரியயனாதி அமரர்களையும், ஏனையோரையும் இங்கு தாக்கடவாய்" என்ன; நந்திதேவர் "அனைவரும் வரவேண்டுமென" நினைத்தவுடனே எல்லோரும்வந்து ஈசனை இறைஞ்சி எழுகடல் திரண்டதென்ன நின்றனர். அத்தருணம பிரமதேவர், மணிமகுடம் முதலிய திவ்வியாபரணங்களைப்படைத்து, பொற்றட்டில் வைத்து, சிவபெருமான் திருமுன் வைத்து, வணங்கிநின்று "எந்தையே! உமக்கு விருப்பும் வெறுப்பும இல்லை; அடியேங்கள் உய்யும்பொருட்டு திருக்கல்யாணம் செய்ய வுளமிசைந்தீர். உமது திருமேனியிலுள்ள பாம்பு பன்றிக்

கொம்பு சிரமாலை ஆடையோடு முதலியவைகளை நீக்கி, இந்த இரத்தி னாபரணங்களை அணிந்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந் தார். புரமெரித்த பொன்னார்மேனிப் புரிசடைக்கடவுள் புன்முறு வல்கொண்டு "நான்முக! நீ அன்போடு தந்தமையால் இவற்றை யணிந்தாற்போல மகிழ்ந்தோம்" என்று அக்கலன்களைக் காத்தாற் றொட்டனர். பின்னர் திருமேனியிலுள்ள பாம்பு எலும்பு முதலிய வைகள் இரத்தினாபரணங்களாக இறைவன் எண்ணியவுடன் அவை கள் அவ்வாறாயின அதுகண்டு அனைவரும் அற்புதமுற்று அஞ்சலி செய்தார்கள்.

ஆலமுண்ட அரனார் இமயவெற்புக்குச் செல்லவுன்னி, தமது கணநாதர்களுக்குக் குறிப்பாலுணர்த்தி, இருக்கைவிட் டெழுந்து, நந்திதேவர் துதித்து முன்செல்ல, அருந்தவரும் அமரரும் புகழ, விஞ் சையர் இசைபாட, வேதாகமங்கள் வியந்து துதிக்க, திருக்கோயிலி னின்று நீங்கி, தமது பாததாமரைகளைக் குண்டோதரன் புயமீது வைத்து தருமவிடைமீது ஏறியருளினார். அவ்விடபாரூடக்காட்சி யைக்கண்டு அனைவரும் "ஹரஹர" என்று கடல்போல ஆர்த்து அஞ்சலி செய்தார்கள். சந்திர சூரியர் தண்ணிழற்குடையையும், வாயு சாமரத்தையும், வருணன் சாந்தாற்றியையும், அமரர்கோன் ஆல வட்டத்தையும் எடுத்துக்கொண்டு அருகில் நின்று ஏவல்செய்தனர். பூதங்கள் பற்பல இன்னிசைக் கருவிகளை முழக்கின; இறைவன் ஏவ லினாலே அரியயனாதி அனைவர்களும் தத்தம ஊர்திகளின்மேல் புடை சூழ்ந்து சென்றனர் இவ்வாறு இறைவன் காண்போர் கண்கவரும் கட்டழகுடன் இமயவெற்படைந்தனர். அதையறிந்த இமவான் தம ருடன் எதிர்கொண்டு வணங்கி, தனது ஓஷதிபிரஸ்தமெனனும் நகரத் துக்கு அழைத்தேகினான். இருடிகள் பல பூரணகும்பங்களை ஏந்திக் கொண்டுவந்தார்கள்; மகளிர் அட்டமங்கலங்களைக் கொண்டுவந்து காட்டினார்கள்; சிலமகளிர் நீராஞ்சனஞ் சுற்றினார்கள். திருமணச் சாலை சென்றவுடனே அனைவரும் ஊர்திவிட்டிறங்க அரனாரும் விடை யினின்றும் இறங்கியருளினார்

மலையரையன் மனைவியாகிய மேனை அரம்பையர்களோடு வந்து எம்பெருமானுடைய இணையடிகளைக் காமதேனுவின் பாலினாலாட்டி, கைதொழுதுகொண்டு திரும்பினாள் உடனே சிவபெருமான் திரு நந்திதேவர் கொண்டுவந்துவைத்த பாதுகையின்மேல் தமது பாதங் களைவைத்து இருபுறத்தும் நாரணனும் நான்முகனும் கைகொடுப்ப,

தமது திருக்கரங்களால் பற்றிக்கொண்டு, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, தும்புரு நாரதர் பாட, உருத்திரர் சூழ, கணங்கள் ஆரவாரிக்க, திருக்கோயினுட்சென்று, அரியயன் வேண்ட, ஆங்குள்ள அழகுகளை திருநந்திதேவர்காட்டச் சென்றுசென்று பார்த்தருளினர்.

பின்னர், எம்பெருமான் திருமணமண்டபத்தேகி இந்திரநீல மணித்தவிசின்மேல் வீற்றிருந்தருளினார். வீரபத்திரர், காலாக்கினி உருத்திரர், கூர்மாண்டேசர், ஆடகேசுரர், ஐயனார் முதலிய உருத்திரர்களும், அரி அயன் ஆகண்டலனாதி அமரர்களும், அருந்தவரும் தத்தமக்குரிய ஆசனங்களில் சிவமூர்த்தியைச்சூழ்ந்து இருந்தார்கள். அக்காலை பார்வதி பரமேசுவரரது திருமணவைபவத்தைத் தெரிசிக்கும்பொருட்டு எப்புவனத்திலுமுள்ள யாவரும் அங்கு குழுமியதால் இமயமலை நடுங்கியது. பூமியின் வடபால் தாழ, தென்பால் உயர்ந்தது; தேவர்முதலிய யாபேரும ஏங்கி "சிவசிவ ஹரஹர" என்று ஓலமிட்டார்கள் அதுகேட்ட அரனார் நந்திதேவர்மூலம் அகத்திய முனிவரையழைத்து, "அகத்தியனே! இங்கு அனைவரும் கூடினமையால் வடபால் தாழத் தென்பால் உயர்ந்தது; இதனால் ஆன்மகோடிகள் அல்லலுறுகின்றன; இதனைச் சமன்செய்ய நீ உடனே தென்னாடு சென்று பொதியமலையின்மேல் இருக்கக்கடவாய்" எனப்பணித்தனர். அகத்தியர் அச்சமுற்று "பரமகருணாநிதியே! அடியேன் புரிந்த குற்றம்யாது? தமது திருமணக்காட்சியைக் காணவொட்டாமற் கொடியேனை யகற்றுகின்றீர்; எனது கணகள் தவஞ்செய்யவில்லை போலும்" என்றனர். சிவபெருமான் "முனிவா! உனக்கு இணையான இருடிகள் உலகில் உண்டோ? இல்லை; அயனும் நினக்கு நிகரல்லன்; ஆதலால் நீனைத்தவையனைத்துந் தவறின்றிமுடிக்குந் திறமுடையாய்; இச்செயற் கருஞ்செயலை ஏனையோரால் செய்தற்கியலாது; யாவரினும் மேலாய நின்னால்மட்டும் இதுசெய்தற்கெளிது, செல்லுதி" என்றனர். அகத்தியமுனிவர் "எமது பரமபிதாவே! அரியயனாதி அமரர்கள் நிற்க, அடியேனுக்கு இதனைப்பணித்தருளினீர்; உமது திருமணக்காட்சியைக் காண்பதற்கு என்மனம் விழைகிறது; அதனைவிட்டு நீங்குதற்கு வருந்துகிறேன்; இதற்கு என்செய்வேன்" என்ன, சிவபெருமான் "நீ சற்றுந்தியங்காது பொதியமலைசெல்வாய் நாம் அங்குவந்து நமது திருமணக்கோலத்தைக் காட்டுவோம்; நீ மகிழ்ந்து தெரிசிப்பாய்; நம்மை தியானித்து அங்கு சின்னாளிருந்து பின்பு முன்போல் நமது பக்கத்தில் வருவாயாக" என்று அருளிச்

செய்தனர். ஆழியைப்பருகிய அகத்தியனார் அதற்கியைந்து அரனாரைப் பன்முறை வணங்கி துதித்து நெட்டுயிர்த்து அரிதினீங்கி பொதியாசலம் போந்து, புரிசடையண்ணலைத் தியானித்திருக்க பூமி சமனாகியது. ஆனபாக்கள அலககண் நீங்கி அழுவேலந்தியைத் துதிதது மகிழ்நதன.

இமவான் உமையை அழைத்துவருமாறு ஏவ தேவமாதர் பணி செய்ய சிவகாமசுந்தரி மணமண்டபமெய்தினள்.

அங்கது பொழுதுதன்னி லரசன திசைசா லெங்கள்
சங்கரி யையைக் காப்பச் சசியென்பா ளடைப்பை யேந்தக்
கங்கைகள கவரிவீசக காளிகள் கவிகை பற்றப்
பங்கய மானைகைப் பற்றிப பாரதி பரவவந்தாள்.

அங்ஙனம வந்த அமமையார் ஆகியுமநதமுமில்லா அண்ணலை அஞ்சலிசெய்ய, சிவமூாததி "நம அருகில் அமாநதி" என்று பணித்தருள, பார்ப்பதியாா இலக்குமிமுதலியோா துதிக்க எமபெருமான் பக்கத்தின் எழுந்தருளி யிருந்தார். மலையரையன் சிவபெருமானை வணங்கி மேனை காகநீர் விடுப்ப, அவாது பதாமபுயங்களை விளக்கி, சந்தனத்தாலும் நறுமலராலும் பூசித்து, உமாதேவியின் காமலரை இறைவன் காத்தில் வைத்து. "அடியேனது புதல்வியை உமக்குத் தந்தேன்" என்று வேதமந்திரங்களைச் சொல்லி தாராதத்தஞ் செய்தான். அப்பொழுது அரம்பையாகள் ஆடினார்கள்; சித்தகந்தருவர்கள் பாடினார்கள்; தும்புரு நாரதா இசை கூடினார்கள்; திருமகளும் கலைமகளும மங்கலப்பாடலை ஓதினார்கள்; விண்ணவர் தண்மலர்சொரிந்தனர்; பூதர்கள் மங்கலவாத்தியங்களை முழக்கினார்கள் ; முனிவர்கள் வேதங்களைச் சொன்னார்கள்; இமவான் பால், நெய், தேன், மா கதலி பலா முதலிய கனிகள் முதலியவைகளை எம்பிரான்முன் வைத்து, "எநதையே! இவற்றைத் திருவமுது செய்தருளவேண்டும்" என்று வேண்டினன். மங்கைபங்காளர் மனமகிழ்ந்து "நாம் இவற்றை அமுது செய்தாற்போல உவந்தோம், நீ எடுத்துக்கொள்வாய்' என்ன, மலைவேந்தன் அன்போடு அந்த நிருமாலியத்தை எடுத்து மலர், கந்தம், நீர் என்பவற்றோடும் ஒருபுறத்தில் வைத்தான்.

கலைமகள் நாயகன் மலைமகள் நாயகனை வணங்கி, தேவதேவ! விண்ணவரும் மண்ணவரும் மணவிதியை உணர்தறபொருட்டு, சர்வலோகைக நாயகாகிய தேவரீர் நடததிக்காட்டவேண்டும்; ஆதலால்

மணச்சடங்கை முற்றுவிக்கும்பொருட்டு அனுமதி தரவேண்டும்" என்று வேண்ட; முக்கண்ணர் முறுவல்செய்து இயைந்தருள, திசைமுகன் தீ வளர்த்து வெள்ளியும் வியாழனும் பிறமுனிவரும் அருகிருந்து மறையறைய மணவினைச் சடங்கை இனிது செய்துமுடித்தான். அனைவரும் அம்மையப்பரை அஞ்சலி செய்தார்கள். அம்மையும் அப்பனும் அனைவருக்கும் அருள்புரிந்தார்கள். இமவான் சிவநிருமாலியமாகிய தீர்த்தம் சந்தனம் மலர் முதலியவற்றை அனைவருக்கும் வழங்கினான். அவற்றைப்பெற்று அனைவரும் உட்கொண்டு அணிந்து 'இன்றே நம் வினையனைத்தும் அழிந்தன" என்று பெருமகிழ்வுற்றார்கள்.

அப்பொழுது தாபத நிலையாளாகி அங்கிருந்த இரதிவந்து சிவபெருமானை வணங்கி "சதாசிவ தயாபர! அடியேனது அல்லலையகற்றியருளுக" என்று குறையிரந்தனள். எண்டோளிறைவன் கருணைசெய்தவுடனே மன்மதன் தோன்றி சிவமூர்த்தியை வணங்கி "கிருபாநிதியே! அடியேனது குற்றத்தைப் பொறுத்தருளக" என்று துதித்தனன். மலைமகள் பங்கன் "மதன! நமக்குச் சினமிருந்தாலன்றோ மன்னித்தல்வேண்டும்; வருந்தாதே; நீ இரதிக்குமட்டும் உருவமாகவும், மற்றையோர்க்கு அருவமாகவும் இருந்து நின்னரசியலை நடத்தக்கடவாய்" என்று அவனுக்கு உரிய அரசையும் ஆற்றலையும் தந்து இரதியுடன் இருக்கை செல்ல விடைகொடுத்தருளினார்.

பின்னர் சிவபெருமான் உமாதேவியோடு மணித்தவிசினின்றுமெழுந்து மறையொலியும் மங்கலமுழவும் முழங்க இடபமீதூர்ந்து திருக்கயிலாயமலையடைந்தனர். மாலயனாதி வானவரையும் மலையரையனையும் ஏனையோரையும் தத்தம் இருக்கைசெல்ல விடைகொடுத்தருளி, இடபத்தினின்று மிறங்கி திருக்கோயிலினுட்சென்று மலைமகளுடன் முன்போல் அரியணைமேல் வீற்றிருந்தருளினார். உயிர்க்குயிராகிய உமாதேவியுடன் கண்ணுதற்பரமன் வீற்றிருந்தருளலும் ஆண் பெண் என்னும் இருபாலினவாகிய ஆன்மகோடிகள் துன்பநீங்கி இன்பமுற்றிருந்தன.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம :

# கற்பு

(155 வது பக்கம் தொடர்ச்சி)

பெண்களுக்கு சிறந்த அணிகலம் கற்பு என்பதாம். உயிரினுஞ் சிறந்ததாக ஒப்பத்தக்கது இக்கற்பு என்பது. கற்பு அழிய நேரிடுங்கால் உயிரைத் துரும்பாக நினைத்துத் துறப்பார்கள் கற்புடை மாதர்கள் இத்தகைய கற்பானது வடவைத்தீயினும் வெப்பமுடையது. கற்புடை மாதரைக் கனலும் தீண்ட அஞ்சும் கானகத்தில் எதிர்ப்பட்ட பெருங் கனலைக்கடந்த சந்திரமதியின் கற்பை யுணராதார் யாவர் ?

இராவணவதத்திற்குப்பின், இராமபிரான் சீதையிடம் நற்செய்தி கூற அநுமனை ஏவினர். அநுமன் சீதையின்பாலேகி இராவணவதத்தையும் இராமனது வெற்றியையும் கூறினன். சானகிபிராட்டியார் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனள. இராமபிரான் விபீடணனை நோக்கி "அன்ப! எனது வாழ்க்கைத் துணைவியாகிய சானகியை நன்றாக அலங்கரித்து அழைத்து வருவாயாக" என்றனர். விபீடணர் சீதைபாற்சென்று வணங்கி, அம்மா! இரகுநாயகர் தங்களைக்காணவிரும்புகின்றனர்; தேவர்களுந் தெரிசிக்கவந்துளார்; துன்பத்தை விடுத்து அழகுபெற அலங்கரித்து வருவீர்" என்றனர். சீதை "யான் இங்கு ரகுநாயகனைப் பிரிந்தபின் துன்புற்றிருந்த இக்கோலத்தை தேவர்களும் எனது பதியும் ஆங்குள்ள முனிவர்குழாங்களும் கற்பின் மிக்க மாதர்களும் காண்பதே பெருமை; அலங்கரித்துக்கொண்டேகுதல் நலமன்று" என்றனள். விபீடணர், "அம்மா! இது இரகுவீரரது ஆணை" என்ன, அன்னையுமிணங்க மேனகை ஊர்வசி முதலிய தேவமாதர்கள் மாசுற்ற திருமேனியும் சிக்குற்ற கருங்கூந்தலும் அழுக்கு படிந்த ஆடையுங்கொண்டிருந்த சீதாபிராட்டியாரை மங்கல நீராட்டி, அழகெலாந் திரண்டொன்றாக அமைந்ததுபோல் அலங்கரித்து, விமானத்தின்மீது ஏற்றி இரகுவீரரிடம் கொணர்ந்தார்கள். சீதை போர்க்களங்கண்டு களித்து விமானத்தினின்றிழிந்து, இராமபிரானடியில் வீழ்ந்து இறைஞ்சி "இனி மரணம் நேரினும் நன்று"

என்று மகிழ்ந்து துன்பம் நீங்கினவராய் கைகுவித்து நின்றார். அவ்வாறு நின்ற கற்புக்கரசும் காரிகையார் திலகமும் பத்துமாதமாக உணவுநீத்த உத்தமியும், பொற்புக்கழகுமாகிய சானகியாரை இராமச்சந்திரர் கோபக்குறியுடன் நோக்கி கடிந்துரைக்கலாயினர்.

நீதிநெறி வழுவிய நிருதனாகிய இராவணனது பெரிய இலங்கையில் நெடுநாள் வாழ்ந்து அவன்கீழ் அடங்கியிருந்தாய்; அறுசுவையுணவுவகைகளையும் விரும்பியுண்டாய்; நல்லொழுக்கம் பாழ்பட இறந்தாயில்லை; இத்தன்மையளான நீ இப்பொழுது அச்சமின்றியாண்டுயாது கருதிவந்தாய்? நான் உன்னை விரும்புவேன் என்று கருதினையோ? சானகி! உன்னைச் சிறைமீட்டு அழைத்துக்கொள்ளுதற்பொருட்டு கடலில் அணைகட்டி இராவணனாதியரை அழித்தேனில்லை, தன் மனைவியைக் கவர்ந்தவனைக் கொன்றிலன் என்ற பழிப்பினின்றும் என்னை மீட்டுக்கொள்ளுதற்பொருட்டு நான் இலங்கைக்குவந்து பகைவென்றேன்; அன்பு நீங்கியவளே! அமிர்தத்தினுமினியதென்று ஊன் தின்றனையே; கள்ளைக் குடித்தனையே; இவ்வாறு மதுமாமிசபட்சணஞ்செய்து உயிருடனிருந்தாயன்றோ? அவ்வாறாகிய நீ அத்தகைய வுணாதிகளால் எமக்குச்செய்யும் விருந்துகள் உளவோ? உயர் குணங்களெல்லாம் உன்னைவிட்டு ஒழிந்தன; நீ நற்குலத்திற்பிறவாது வழியிலாத புழுவைப்போல் நிலத்திற்பிறந்ததால் அப்பிறப்பின் தன்மையைப் பூரணமாகச்செய்துவிட்டாய்

பெண்மையும் பெருமையும் பிறப்புங் கற்பெனுந்
திண்மையும் ஒழுக்கமுந் தெளிவுஞ் சீர்மையும்
உண்மையு நீயெனு மொருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததே.

நாணம் முதலிய மகளிர்க்குரிய குணங்களும் பெருமையும் உயர்குடிப்பிறப்புக்கேற்ற இயல்பும், பதிவிரதாதருமத்தின் உறுதியும், நல்லொழுக்கமும், தெளிவும், புகழும், உண்மையும், நீ ஒருத்தி தோன்றியதனால் ஈகையில்லாத அரசனது கீர்த்தி அழிதல்போல உலகத்தில் அழிந்தன. உயர்குலப்பெண்டிர் கணவனைப்பிரிந்த காலத்து ஐம்புலன்களை அடக்கிவைப்பர், ஒழுக்கத்தை உறுதியாகக் கொண்டு தலைமயிரை வாரிமுடிக்காமல் சடைத்தொகுதியாகத் திரித்துவிட்டிருப்பர்; கற்பின் உறுதியால் மாதவம் செய்வர்; ஒரு பழியுண்டாகுமேல் உயிரைநீத்து அப்பழியைப் போக்கிக்கொள்வர், பல கூறுவதில் பயன் யாது? உனது தீயொழுக்கமானது என்மனத்தையறுக்

கின்றது; ஆதலால் நீ இப்பொழுது செய்யக்கடவது இறந்தொழி வதே அல்லது உனக்குத் தக்கதோரிடத்தில் செல்லுதி" என்று கடிந்துரைத்தனர்.

இவ்வுரைகளைகேட்ட முனிவர்களும், தேவர்களும் அளவில் லாத மகளிரும் நிருதரும, வாநராகளும வாயவிட்டலறினார்கள். நாணத்தால் தரையை நோக்கித் தலைகவிழ்ந்துநின்ற மைகில் வைகும் மங்கையாக்கரசியார், இவவளவுகாலம் இராமனைப்பிரிந்து வருந்தி யவா இபபொழுது அவ்விராமனது கடுஞ்சொறகளைக் கேட்டவுடனே புண்ணைக்கோல்கொணடு கிளாியதுபோல் மிக்க வருத்தத்தால் இரணடு கண்களினின்றும இரத்தமும் நீரும் மிகுதியாகச்சிந்த நினைப் பற்று நெடுமூச்சுவிட்டாா. பருந்துகள் மிக்க பாலைவனத்தில் சிக்கி நீர்விடாயால் வருந்தி மரணத்தருவாயில் இருக்கிற மான் பெரிய நீர் நிலையைக்கண்டு அதில் இறங்கவொண்ணாதபடி பெரியதடை ஏற் பட்டாறபோல அறிவுகலஙகினாறு, நீணடகணகளினின்றும நீர் மழைசிந்த உலகினை நோக்கி "நான் இதுகாறும் தீயொழுக்கமின்றி நல்லொழுக்கததோடு உயிாவாழ்ந்திருந்து பெறற பயன் இவ்வளவே போலும, எனது நல்வினை இவ்வளவோடு பயன்தநது கழிந்தது" என்று கூறி இராமபிரானை நோககிக் கூறுவாராாா.

வரையாதுவழங்கும் வள்ளலே! அநுமான் முன்பு இவ்விலங்கை க்குவந்து என்னைப்பார்தது, "நீர் இவ்விடத்திற்கு எழுந்தருள்வீர்" என்று எனக்குத் தேறுதல்கூறிச்சென்றனன்; எல்லோரினும் மேலாவ ஞென அவ்வநுமான் இங்குசோர்ந்துகிடந்த எனது நிலைமையை உள்ள படி உமக்குக்கூறவில்லைபோலும்; அவ்வநுமான் தூதலட்சணபூர்த்தி யுடையவனல்லனோ ? புருஷோத்தம! இவ்வளவுகாலம் நான் மிகுந்த துன்பத்தோடு காத்துவநதனவாகிய எத்துணைச் சிறந்த தவமும், எத் துணை நற்குண நறசெய்கைகளும், எத்துணைச் சிறந்த பதிவிரதாதரும மும் ஆகிய இவைகளெல்லாம, 'நீர் உமது திருவுளத்தில் அறிந்திடா ததனால் பைத்தியச்செயலெனும்படி வீணே பழுதுபட்டது; நான் உலகமுழுவதிலும் சிறந்த பதிவிரதை; பிரமனுக்கும் மாற்றக்கூடிய மனநிலையுடையேனல்லள், இங்ஙனமிருந்தும், இராமபிரான இவ்வாறு இழிவாக எண்ணினால் இக்கருத்தை மாற்றும் வகையை தெய்வம் அறிவதோ? நான்முகன், நாரணன் நாரிபங்கன் ஆகிய மும்மூர்த்தி களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லாப் பொருள்களையும்

உள்ளபடி உணரவல்லாராயினும் மாதர்களுடைய மனத்தின் நிலைமையை இதன்மையதென்று உள்ளபடி உணரவல்லரோ? ஆதலால் இனி எனது குற்றமற்ற கற்பு நெறியை வேறு யாருக்குத்தான் சொல்லியுணர்த்தக்கடவேன்? இந்நிலையில் எனக்கு இறத்தல்போலச் சிறந்தது வேறொன்றில்லை, "இறப்பாய்" என்று கட்டளையிட்டது தக்கதே, எனது வினைப்பயனும் அங்ஙனமே உள்ளதுபோலும்" என்று சொன்னாள்; மீளவும் சீதை இலக்குமணனை அருகில் அழைத்து "அக்கினியை அமைப்பாய்" என்றுகூற, இலக்குமணன் அதுகேட்டு மனம்வருந்தி, உயிர்களுக்குப்புகலிடமாகிய அவ்விராமபிரானை வணங்க, ஸ்ரீராமர் கண்குறிப்பால "செய" என்று கூறினார். இலக்குமணன் இராமரது கருத்தையுணர்ந்து, மரணவேதனைக்கு நிகரான வருத்தத்தையடைந்து, விம்மிவிம்மி அழுதலாற் சொரிகின்ற கண்ணீரையுடையவனாய், அவ்விடத்தில் தீப்பிரவேச முறைப்படி தீயை வளர்த்தனன். விண்ணவர்க்கும மண்ணவர்க்கும தாயாராகிய சீதாதேவியார் தியருகில்நடந்து சென்றனர் அக்கடுஞ்செயலைக்கண்டு சகிக்க மாட்டாமையால் நான்கு வேதங்களும் சிறந்த அறமும் எல்லாவுயிர்களும் வாயைத்திறந்து கதறின, சீதாபிராட்டியார் அக்கினிப்பிரவேசஞ் செய்தற்பொருட்டு அக்கினியை வலம்வரும்போது சுவர்க்கம் முதலிய உலகங்களும கலக்கமுற்றுக் கதறின, ஓவென்றலறி இராமனை நோக்கி "ஐய! இதன்மையதான இத்தணியாக் கோபம் தகுதியில்லாதது" என்று கூறின இந்திரன் மனைவியர் முதலிய தேவமாதர்கள் ஆகாயவெளியிலே நின்று கதறுகின்றவர்களாய்ச் சிவந்த கைகளால அழகிய தங்கள் கண்களை மோதிக்கொண்டு துடித்தார்கள். பிரமாதி தேவர்களெல்லாம் உள்ளமும் உடலும நடுங்கினார்கள். பூதலத்தைச் சுமக்கிற ஆதிசேடனுடைய படம் சுருங்கியது. அப்பணியரசனது வாயினின்று கக்கிய விஷம் பரவுதால் உலகமுழுவதும் தவிபபடைந்தது, சூரியன் முதலிய சுடர்கள் இடம் பிறழ்ந்தன, கடல்கள் கதறின, சங்குவளையல்களை யணிந்த சானகிபிராட்டியார அக்கினியை நோக்கி "தழற்கடவுளே! நான் மன மொழி மெய் என்கிற திரிகரணங்களில் ஒன்றினாலேனும் களங்கமுடையேனாயின், என்னை நீ கடுமையாக எரித்துவிடு" என்று கூறி புனத்துழாயலங்கல் பூவைவண்ணனைப் போற்றிசெய்து, ஆழ்ந்த பெரிய நீர்நிலையில் ஓங்கியெழுந்த செந்தாமரை மலராகிய தனது வாழிடத்தையே சென்று சேர்பவள்போல் அந்தத்தீயில் விரைவாகப்

பார்த்தனள். அங்ஙனம் பார்த்தவுடன் அந்தக்கற்பரசியின் பதிவிரததருமமாகிய நெருப்பினால் அந்த அக்கினி வெண்ணிறமுள்ள பஞ்சுபோல் எரிந்தது. சீதையின் கற்புத் தீயால் தவிப்படைந்து எரிகிற மேனியுடையவனாகிய அக்கினிதேவன் தத்துவஞானத்தின் கொழுந்தாகிய இராமபிரானைக்குறித்து அபயம் வேண்டிப் பேரொலி செய்து கைகுவித்து வணங்கி அம்மையாரைக் கரத்திற்றாங்கிக் கொண்டு எழுந்தான். தன் கணவன் காட்டிய கோபத்தாலாகிய தாபத்தால் சீதையின் திருமேனியில அரும்பிய வேர்வைநீர்த்துளிகளுட உலரவில்லை; அப்பிராட்டியின் கூந்தலிற் சூடிய பூக்கள் தன்னிடம் மொய்த்து இசைபாடுகிற வண்டுகளோடு இடைவிடாது துளிக்கின்ற தேனோடும், நீரில் தோய்த்து எடுக்கப்பட்டனபோலக் குளிர்ந்து காணப்பட்டன. இன்னும் இதைப்பற்றி மாறுசொல்ல வேண்டுவது உண்டோ? நிலைதுலைந்துள்ள உலகங்களும் பிறழ்ச்சியொழிந்து சரியாகின்றன. இரங்கியவர்களுடைய உயிர்களெல்லாம அச்சமொழிந்தன, அருந்ததி முதலிய மாதர்கள் மகிழ்ச்சியின் மிகுதியால் கூத்தாடுபவராகி நாணமும் அச்சமும் நீங்கப்பெற்றனர்.

அக்கினிதேவன் இராமபிரானை நோக்கி "நீர் எனது எளிமையைத் திருவுளத்திற்கொள்ளாமல் தமது மனைவியாரது பதிவிரதா தருமமாகிய தெய்வீக அக்கினியைக்கொண்டு எனவலியை நீக்கினீர்; நீர் சீதாதேவியை மாத்திரமேயன்றி என்னையும கோபித்தனை போலும்; என்றனன். இராமபிரான அக்கினியை நோக்கி "நீயார்? நீ நெருப்பினுள்ளே தோன்றிக் கூறியது என்ன? தீயொழுக்கம் மிக்க இவளை நீ எரித்திடாமல் காப்பாற்றினை; அத்தன்மை யார் சொல்ல நிகழ்ந்தது? கூறுதி" என்றனர். அக்கினிதேவன் 'இரகு வீர! யான் அக்கினிதேவன்; என்னை உலகமாதாவாகிய இத்தேவியினது கற்புத்தீ எரிக்க, அத்தாபத்தைப் பொறுக்கமாட்டாமையால் இங்கு அணைந்தேன், இங்ஙனம எனக்கு நேர்ந்த தன்மையைப் பார்த்தபின்பும இப்பிராட்டியின் ஒழுக்கத்தைப்பற்றி நீ சங்கித்து நிற்கக்கடவையோ? குலமகளிரை மணஞ்செய்துகொள்வதும், அம்மகளிர் கற்பொழுக்கத்தினின்று விலகினார்களானால் அவர்கள் ஒழுக்கத்தைக் குறித்துப் பிரமாணமாக வைத்துக்கேட்பதும், ஏனைய விஷயங்களிலுண்டான ஐயத்தை நீக்கிக்கொளவதும் ஆகிய இவையெல்லாம என்பக்கலிலேயே நிகழக்கடவன என்கிற தத்துவார்த்தத்தை வேதங்கள் வெளிப்படையாகக் கூறுமன்றோ? பொய்ம்மையில்லாத அறுமானுடைய வார்த்தையையும் நனகுமதித்து சீதையை ஏற்றுக் கொள்ளாத நீ, ஐயமுற்றபொருள்களின் ஐயமாகிய குற்றத்தை நீங்கி அங்கைநெல்லிக்கனிபோல் நன்குகாட்டுந்தன்மையுள்ள எனது உறுதி மொழியைக் கேட்டாயினுஞ் சீதையை மீட்டு அழைத்துச்சேர்த்துக் கொள்வாயோ? தேவர்களும் முனிவர்களும் ஏனைய பிராணிகளும் சீதை தீ வலஞ்செய்யத்தொடங்கியபோது அதனைக்கண்டு தங்கள்

தங்கள் கண்களைக் கைகளால் மோதிக்கொண்டு நின்று ஆ என்று கதறியதை நீ கேட்டிலாதாயில்லைபோலும். தருமத்தைவிட்டு இத்தகைய அதருமத்தை எங்கிருந்து கொண்டனை? இராம! கற்புக் கனிகலமாகிய இச்சீதாதேவி மனத்திற் கோபங்கொண்டால் மேகம் மழை பொழியுமோ? பூமி உடனே பிளந்துவிடுவதல்லாமல் எல்லாப் பாரங்களையும் பொறுத்துக்கொண்டிருக்குமோ? தருமம் செவ்விதாக நடக்குமோ? உலகம் நிலைத்திருக்குமோ? இவள் கோபங்கொண்டு சபிப்பாளானால் தாமரை மலரில் வாழும் சதுர்முகனும் இறந்து விடுவானன்றோ?

> பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
> செய்யுமே பொறையறம் நெறியிற் செல்லுமே
> உய்யுமே யுலகிவ ளுணர்வு சீறினால்
> வய்யமேன மலர்மிசை யயனு மாயுமே.

சானகியாரது கற்புத்தழலால் தாபமுற்ற தழற்கடவுள் இவ்வாறு பெருமைமிக்க பலவார்த்தைகளைச் சொல்லி நின்று, பிராட்டியின் கற்புநிலையைக்கண்ட களிப்பினால் கூத்தாடுகின்ற தேவர்கள்முதல் மற்றை உலகத்துயிர்களும் ஆரவாரித்து களிப்புமிக, மயில்போலுஞ் சாயலையுடைய பிராட்டியைப் பெருமான்பக்கத்தில் கொணர்ந்து விட்டான். இராமபிரான் "அக்கினியே! நீ உலகத்துயிர்கட்கெல் லாம் நீதிநெறி தவறுதலில்லாத சாட்சியாகின்றாய்; ஆதலால் இகழ்ச் சிக்கு இடமில்லாத சிறந்த வார்த்தைகளைச்சொல்லி நீ இவளை யாதொரு குற்றமுமில்லாதவளென்று சொல்லினை; ஆதலால் இவ ளிடத்து யாதொரு பழியுமில்லை; இனி இவள் என்னால் நீக்கத்தக்க வளல்லள்" என்று கூறி சீதாதேவியை அங்கீகரித்தனர்.

சீதையின் கற்பின் திறத்தை உற்றுநோக்குக; கற்புத்தீயின் பெருமையையும் அத் தீ பட்டு அழற்கடவுளடைந்த சிறுமையை யும் நுனித்துணர்க; கற்புடையார் பெருமையை யாரே கழறவல்லார்? கற்புடையார்க்குச் செய்யத்தகாத காரியம் மூவுலகிலுமில்லை. அவர் நினைப்புமாத்திரத்தால் மூவுலகையும் அழிப்பர். கற்பின் வலியைக் கண்டு அஞ்சாதார் யாவர்? கற்புடையாரைப்பகைத்து உய்ந்தோர் ஒருவருமில்லை. எக்காலத்தும் அழியாப்புகழையுண்டாக்குவது இக் கற்பின் உறுதியேயாகும். இத்தகைய கற்புடைமங்கையை வாழ்க் கைத்துணைவியாகப் பெற்றோன் எல்லா நலன்களையும் எய்துவன்; அவனுக்குப் பெறத்தகாத பொருள் மூவுலகிலுமில்லை. பொன்றாப் புகழைப் பெறுவன்.

---

(தொடரும்).

உ

ஓம் குஹாயநம:

# தொண்டர்தம் பெருமை

K. V. சிவசுப்பிரமண்யன், B.A., சிதம்பரம்.

மலரில் மணமும், மணியில் ஒளியும்போல் எங்கும் நிறைந்திருக்கும் கற்பனை கடந்த தற்பரம்பொருளாகிய சிவபெருமானை நாம் வழிபட்டு நற்கதியடைவதற்குரிய இடங்கள் குரு (Devotion to teacher), லிங்கம் (Adoration of image) சங்கமம் (Benevolence to the fellow-worshipper) என்னும் இம்மூன்றுமாம். குரு ஆசாரியனெனவும், இலிங்கம் விக்கிரகம் எனவும், சங்கமம் சிவனடியார்கள் எனவும் பொருள் பெறும். இவற்றுள் குருவழிபாடு தீக்கை பெற்றோரால் தமது ஆசிரியரிடத்து மாத்திரம் செய்யப்படுவது. மூர்த்திவழிபாடும், சிவனடியார் வழிபாடும் எல்லோராலும் யாண்டும் செயற்குரியன. இவ்விரண்டனுள் அதிக பலனைத் தருவது சிவனடியார் வழிபாடே என்பது சைவநூற்றுணிபு.

சிவலிங்க முதலிய வடிவங்களைப் பூசித்தல் சிவபெருமானை மாத்திரம் பூசிப்பதாகும். சிவனடியாரைப் பூசித்தல் அவர்களையே யன்றி அவர்கள் உள்ளத்தைக் கோயிலாகக்கொண்டு இனிது வீற்றிருக்கும் சிவபெருமானையும் பூசிப்பதாகும். சிவபெருமான் குறைவிலா நிறைவாய் வேண்டுதல் வேண்டாமையற்றிருப்பதனால் அவரைப் பூசிப்பது அவரது பிரயோசனங் கருதியதாகாமல் பூசிப்பவர் பிரயோசனங் கருதியதாகும். சிவனடியார்களைப் பூசிப்பவர் தாம் மல நீக்கம் பெறுவதோடு அவ்வடியார்க்கும் பயனையளிப்பவராவர்.

படமாடக் கோயில் பகவற்கோன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கோன் றீயில்
படமாடக் கோயில் பகவற் கதாமே

—என்பது திருமந்திரம்.

"பத்திவழி நிற்பார்க்கு வினைத்துயர் தீர்த்திட எடுத்த வடிவு" தான் சிவனடியார் வேடம் என்றார் பரஞ்சோதி முனிவர். சிவனடியார் கூட்டத்தில் சிவபெருமானும் ஒருவராயிருந்து நீங்காதுறை

கின்றார். இது சிதம்பரத்தில் தில்லைவாழந்தணரோடு தாமும் ஒரு வீட்டாராக இருந்தமையா லறியப்படும்.

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்,
வாயாரத்தன் னடியே பாடுந்தொண்டர்—இனத்தகத்தான்.
—திருத்தாண்டகம்

ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பாடச் செழுமறைகள்
ஓலமிட்டு முணர்வரியா ரடியாரொடு ரூழனதென்றால்
ஆலமுது செய்தபிரா னடியார் பெருமை யறிந்தாரார்.
—பெரிய புராணம்.

எத்தகையினராயினும் சிவனடியார் திருக்கூட்டத்தில் சேர்ந் திருக்கப்பெறில் அவர்களது பாவமு சக்தியால சிவன் முக்தராய் விடுவர். பசவதேவருடைய அருட் சக்தியினால், கத்தரிக்காயை இலிங்கமெனக் கழுத்திலணிந்து களளவேடம் புனைந்து வந்த கள்வ செல்லாம களங்கமற்ற உண்மைச் சிவனடியாரானமையும், மரக்கால், கட்டுத்தறி முதலியனவும் சிவலிங்கங்களாக மாறினமையுமாகிய வசவபுராணச் சரித்திரங்களாலும இவை யறியப்படும். அதுபற்றியே சிதம்பர மும்மணிக்கோவையில

" மெய்த்தவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க்குண்டோ பெறத்தகாதனவே "

எனக்கூறப்பட்டது. சிவனடியார்க்களித்த உணவு உருத்திரன் மால். அயன் என்னும் மூவர்க்கும் அளித்ததாம். சிவஞானிக ளுடைய பரிகல மிச்சிலை உணவைப் பெறுவதனாலேயே ஆணவமலம் தொலைந்து சிவஞானம் தோன்றும் என்பது நூற்றுணிபு. இக்கருத்து கீழ்வரும் திருமந்திரப் பாடலில் வலியுறுத்தப் படுதல் காண்க :—

"வித்தகமாகிய வேடத்த ருண்ட வூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாம்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்று நம் மூலன் மொழிந்ததே.

இந்திராதி பதவிகளைக் கான்ற சோறெனக் கடிந்தொதுக்கிய பெரியோர்களும் சிவனடியாரது பாதோதகத்தை நோக்க விண்ணவ ரமுதை வேம்பென வெறுத்தனர். சிவனடியார்கள் உண்டு கழித் ததை உண்ணப் பெறும் நாயாகவும பிறக்க விரும்பினார்கள் என பண்டாரமும் மணிக்கோவையா லறிகிறோம்.

பந்தமகன்ற சிவபக்தர் பாதம் விளக்கும் புனற்குழியில்
வந்து பிறந்து மூழ்கியதில் வைகும் புழுவின் பேறுப்பேறு
மூந்து கங்கை முதல்வா மூற்றும் படிந்து தீவினைகள்
சிந்து மந்தனுளருமே சோரரென்று மறைசாற்றும்

என்ற பிரபுலிங்க லீலைச் செய்யுளாலும் சித்தாந்த சிகாமணி என்னும் சீரிய வீரசைவநூலாலும் பாதோதகத்தின் பெருமையை நன்குணரலாம். சிவனடியார்கள் செய்யும் வழிபாட்டினால் சிவலிங்கம் முதலிய மூர்த்தங்களில் சிவசாந்நித்யம் அதிகப்படுகின்றது. அதுபற்றியே பாடல்பெற்ற தலங்கள் பெரிதும்போற்றப்படுகின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களை முன்னே திரிகரணங்களாலும் வணங்காமல் மனத்தால் மாத்திரம் வணங்கி வீதிவிடங்கப்பெருமானை வணங்கச் சென்றபோது, விறன்மிண்ட நாயனார் அவ்வாறு சென்ற தம்பிரான் றோழரை மாத்திரமன்றி அவரை யாட்கொண்ட வீதிவிடங்கப் பெருமானையும் " புறகு " (Boycott) எனக்கூறி யொதுக்கினார்.

சிவபெருமான் அடியார்க் கெளியராயிருப்பதோடு அவர்களுக்கு ஏவலும் செய்கிறார் என்பது.

" தூண்டு சுடரனைய சோதிகண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவ தேயீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக் காட்டுறையு மணாளன்றானே.

என்ற திருத்தாண்டகத்தால் விளங்குகிறது.

மாமுகில் தவழும் மணிமதிற் கமலைப்
பெம்மானருமைப் பெருமானாயினும்
ஊனுண் வாழ்க்கைக் கானவர்தரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
உண்டுமிழ்தீ நீருவந்தன ராடியும்
விருப்படி கொண்ட மிச்சி லூண்மிசைந்தும்
செருப்படிக் கடிகள் செழ்மாந்திருந்தும்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்தும்
அருந்தமிழ் வழுதி பிரம்படிக்கு வந்தும்

. . . . . . . . . . . . . . . . . . . .

எளியரின் எளியராயினர்
அளியர் போலு மன்பர்க டமக்கே

—(திருவாரூர் நான்மணிமாலை.)

இன்னும் பல மணிவாசகரது "கீர்த்தித்திருவகவலில்" காண்க.

தொண்டர்கூட்டம் இல்லாதபோது சிவபெருமானுக்கோர பெருமையுமில்லை. அவர் ஐந்தொழில் நடத்தவேண்டுவதுமில்லை. ஆதலால் அவர் திருத்தொண்டர் சகிதமாகவே தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்றார்.

வணங்கத்தலை வைத்து வார்கழல் வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம் பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூறிப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

—திருவாசகம்.

முடிகள் வணங்கி மூவாதோர்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானரமங்கையர்பின்செல்ல
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூ ராதிரைநாளா லதுவண்ணம்

—தேவாரம்.

சிவபெருமானின் பெருமைகளை புராணங்களும, திருத்தொண்டர் செய்கைகளை பெரியபுராணமும் கூறுகின்றன. இதுபற்றியன்றே

"உமையோ இறைவர்பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே."

என்று பெரியார கூறினர். சிவபெருமான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக்கொடுக்க அருள்வசப்பட்டிருந்து தொண்டர் சீர பரவிய சேக்கிழார்பெருமானே

"தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர்தம்
பொருவருஞ்சீர் புகலலுற்றேன் முற்றப்
பெருகு தெண்கடலூற்றுண் பெருநசை
யொருசுணங்கனை யொக்குந்தகைமையேன்."

என்று அருளிச்செய்தாரெனில் மருள்வசப்பட்டு முத்திநெறியறியாத மூர்க்கனாகிய யான் திருத்தொண்டர் பெருமைகளையெல்லாம் எங்ஙனம் எடுத்துச்சொல்ல இயலும் பிழையுளதேல் ஆன்றோர்பொறுக்க.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில.

—(பொய்யாமொழி).

ஓம் குஹாய நம.

# குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதானந்தன்.

## சிஷ்ய லக்ஷணம்.

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

குருநாதனிடத்தில் இருக்கும்பொழுது உயர்ந்த வஸ்திரம் தரிக்கப்படாது; உயர்ந்த ஆகாரம் உட்கொள்ளப்படாது, உயர்ந்த ஆசனத்தில் இருக்கப்படாது, குருநாதன் கட்டளையிடும்பொழுது படுக்கையிலிருந்தும் அமர்ந்துக்கொண்டும் ஏதேனுமொன்றைப் புசித்தும் பராமுகமா இருந்தும் வருவது கூடாது. சிஷ்யனானவன் குருநாதனிடத்தில் ஏதேனுமொன்றைத் தெரிவிப்பதாயிருந்தால் படுத்துக்கொண்டும் உட்கார்ந்துக்கொண்டும் நடந்துகொண்டும் தெரிவிக்கப்படாது. குருநாதனுக்கெதிரில் இஷ்டப்படி இருக்கப்படாது. அவரது பெயரை வெளிப்படையாகக் கூறப்படாது; மஹாமஹிமை தங்கிய குருநாதனென்னச் சொல்லவேண்டும், வாஹனாதிகளில் ஏறிச்செல்லும்பொழுது குருநாதன் சந்தித்தால் அவைகளில் இருந்து நமஸ்காரம் செய்யப்படாது. கீழே இறங்கி நமஸ்கரிக்கவேண்டும், குருநாதனுக்கெதிரில் காது அசையும்படி தலையை யாட்டிக் கொள்வதும் துடையை யாட்டிக் கொள்வதும் காலை நீட்டுவதும் காறி துப்புவதும் சிறிப்பதும் கொட்டாவி விடுவதும் கூடாது. குருநாதனுக்கு அடங்கி சுவதந்திர மில்லாது இருக்கவேண்டும். குருநாதனுடைய படுக்கையிலும் பலகையிலும் ஆசனத்திலும், * கூர்ச்சத்திலும் எந்தச் சமயத்திலும் அமருவது கூடாது. அவர்க்கினாதை சொல்லைச் சொல்லலாகாது. அவர் வேண்டாததைச் செய்யலாகாது. அவருக்கு மனவெறுப்பு உண்டாகாதபடி நடந்துகொள்ளல்வேண்டும். குருநாதன் வெகுதூரத்திலிருந்து வருபவராயினும் கோபங்கொண்டவராயினும் அவருக்கு அபிவாதனம் செய்வது கூடாது. குருநாதன் பெண்டிருடன் இரகஸ்யமாய் இருக்கும் பொழுதும் கூடாது. குருநாதன சமூகத்திலிருக்குங்கால் அவரது உத்திரவு பெறாது, தாய் தகப்பன் முதலியவர்களை நமஸ்கரிக்க அதிகாரம் பெறமாட்டான்! குருநாதன் பாதோதகத்தை பருகல் சிறந்ததென்று உட்கொள்ளல் வேண்டும். குருநாதன வடிவத்தை யெப்போதும் த்யானிக்கவேண்டும். அவரது நாமத்தை எப்போதும் ஜபித்தல் வேண்டும்.

---

* கூர்ச்சமென்பது விஸ்வாமித்திரம் புல்லினால் செய்த ஓர் ஆசனம்.

குருபாதோதகம் பாநம் குரோருச்சிஷ்ட போஜநம்
குருமூர்த்தேஸ் ஸதாத்யாநம் குரோர் நாம ஸதாஜப:

—குருகீதை.

என்று கூறப்பட்டுளது. குருநாதன் நடக்கும்பொழுது அவர் பின்னே செல்லவேண்டும். குருநாதன் நிழலைத் தாண்டலாகாது; அவர்மேல் படுங் காற்று தன்மேல் படாமலும், தன்மேல் படுங்காற்று அவர்மேல் படாமலும் இருந்துவரவேண்டும் அவருக்கு ஹிதம் செய்யவேண்டும். அவருக்கெதிரில் ஆசனத்திலிருக்கப்படாது அவர் நித்திரைபெற்ற பிறகுதான் நித்திரைபெறவேண்டும். அவர் தூக்கத்தினின்று எழுந்திருப்பதற்குமுன் எழுந்திருந்து அவருக்கு வேண்டிய தர்ப்பை சமித்து வஸ்திரம் முதலியவைகளைக் கொண்டுவரவேண்டும். கடுங்காற்று முதலியவை வீசும்பொழுது சொல்லும் சங்கதிகள் காதுகளில் படாது; ஆனதுபற்றி அச்சமயத்தில் ஏதேனு மொன்றை தெரியப்படுத்துவது கூடாது.

எவ்விடத்தில் குருநாதனுடைய (1) பரிவாதம் (2) நிந்தை இவ்விரண்டும் இருக்கின்றனவோ அவ்விடத்தில் தன் இருகாதுகளையும் மூடி வேறிடம் செல்லவேண்டும் குருவின் பரிவாதம் செய்தசீடன் கழுதையாகவும், நிந்தைசெய்தவன் நாயாகவும், அவர் பணத்தை நியாயமின்றிப் புசித்தவன் சிறியபுழுவாகவும், அவர்பெருமையை யுணராதவன் பெரியபுழுவாகவும் பிறப்பார். அவரை மதிக்காதவன் சுவானயோனிநூற்றையடைந்து சண்டாள யோனிகளில் பிறப்பானென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றான். ஆதலால் குருநாதனுக்கு (3) காயத்தாலும் (4) மனத்தாலும், (5) வாக்காலும் ஒருக்காலும் துரோகஞ்செய்யக்கூடாது. யார் ஒருவன் குருநாதனை உம என்று அதட்டுகின்றனனோ அவன் மயானபூமியில் தருவாகமுளைத்து பிணம் சுடும் புகையினால் தகிக்கப்பட்டுப் பிணம்புசிக்கும் நாய் நரி கழுகுகளால் சேவிக்கப்பெறுவன் என்று ஆத்மபுராணத்தில்

குருவை யும்மெனக் கூறுவர் வாதா
லருமறை யவர்தங்களை யரிதின்வெல் லுநர்கள்
எரி சுடலையிற் பெருந் தருவாகியேயிருந்து
நரிகழுகுகள் முதலன சேரவாழுவரே.

கூறப்பட்டுள்ளது. (தொடரும்).

1. பரிவாத மென்பது உள்ள துர்க்குணத்தை எடுத்துக் கூறுவது.
2. நிந்தை யென்பது கெட்ட நடத்தை ஆரோபித்தல.
3. அடித்தல முதலியன காயத்தால் ஆற்றுந் துரோகம்.
4. அனிஷ்டத்தை சிந்தித்தல் மனத்தால் ஆற்றுந்துரோகமாம்.
5. அனுசித வசனத்தைக்கூறல் வாக்காலாற்றுந்துரோகம்.